**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 564/2023**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | திரவியம் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | கரையாளனூர் | வயது | : | 31 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Saturday of 01.08.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் கரையாளனூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடைய பெரியப்பா. அ.சா.1 சங்கீதா என்னுடைய தங்கை. அ.சா.2 திரவியம் என்னுடைய அப்பா. ஏற்கனவே என்னுடைய அப்பாவிற்கும், எதிரிக்கும் தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சுவது சம்பந்தமாக பிரச்சனை இருந்தது.

06.02.2022 அன்று காலை 06.00, 07.00 மணியளவில் என்னுடைய அப்பா தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சி கொண்டிருந்தார். அப்போது எதிரி தண்ணீர் பாய்ச்சக்கூடாது என்று கரண்ட் பீயூசை பிடுங்கினார்.

என்னுடைய அப்பா கரண்ட் பியூசை கேட்டபோது, அரிவாளால் என்னுடைய அப்பாவின் தலையில் வெட்டினார். மீண்டும் என்னுடைய அப்பாவின் நெஞ்சில் வெட்டினார். மீண்டும் என்னுடைய அப்பாவின்

இடது கையில் வெட்டினார். பின்னர் எதிரி அரிவாளால் அவருடைய தலையில் வெட்டிக்கொண்டார். நான் என்னுடைய அப்பாவை ஆலங்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன்.

ஆலங்குளத்திலிருந்து நாகர்கோவில் சுஸ்ருசா மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக கொண்டு சென்றேன். அங்கு சுமார் 10 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும், எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. )

J
CHRISTAL
BABITHA

Digitally signed
by J CHRISTAL
BABITHA
Date: 2026.08.04
13:15:26 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 564/2023**
**வழக்கு சாட்சி PW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணவேணி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | இராமச்சந்திரன் | தொழில் | : | குடும்ப பொறுப்பு |
| கிராமம் | : | கரையாளனூர் | வயது | : | 28 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Saturday of 01.08.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் கரையாளனூரில் குடியிருந்து வருகிறேன். நான் குடும்ப பொறுப்புகளை கவனித்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடைய கணவரின் பெரியப்பா. அ.சா.1 சங்கீதா என்னுடைய கணவரின் தங்கை. அ.சா.2 திரவியம் என்னுடைய கணவரின் அப்பா. 06.02.2022 அன்று காலை 06.00, 07.00 மணியளவில் என்னுடைய கணவரின் அப்பா தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சி கொண்டிருந்தார். அப்போது எதிரி தண்ணீர் பாய்ச்சக்கூடாது என்று கரண்ட் பீயூசை பிடுங்கினார்.

என்னுடைய கணவரின் அப்பா கரண்ட் பியூசை கேட்டபோது, எதிரியும், என்னுடைய கணவரின் அப்பாவும் வாய்வார்த்தைகள் பேசினார்கள். அங்கு என்னுடைய மகளும், என்னுடைய அத்தையும் இருந்தார்கள். வாய்வார்த்தைகள் பேசும் சத்தம் கேட்டு நானும், என்

கணவரும், என் கணவரின் தங்கையும் தோட்டத்திற்கு சென்றோம். வாய்வார்த்தைகள் பேசிக்கொண்டிருக்கும்போது, எதிரி அரிவாளால் என்னுடைய கணவரின் அப்பாவின் தலையில் வெட்டினார். மீண்டும் என்னுடைய கணவரின் அப்பாவின் நெஞ்சில் வெட்டினார். மீண்டும் என்னுடைய கணவரின் அப்பாவின் இடது கையில் வெட்டினார். பின்னர் எதிரி ஓடினார். ஓடும்போது அரிவாளால் அவருடைய தலையில் வெட்டிக்கொண்டார்.

பின்னர் என்னுடைய மாமனாரை ஆலங்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். ஆலங்குளத்திலிருந்து நாகர்கோவில் சுஸ்ருசா மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக கொண்டு சென்றார்கள். அங்கு சுமார் 8 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். திரும்பவும் சுரண்டை அழகேசன் மருத்துவமனையில் எனது மாமனார் 8 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும், எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. )

J
CHRISTAL
BABITHA

Digitally signed
by J CHRISTAL
BABITHA
Date: 2026.08.04
13:15:36 +0530